www.shaivism.org

தலம் திருப்புகலூர்

பண் கொல்லி

ஏழாம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

தம்மையே புகழ்ந் திச்சை பேசினும்
சார்வி னுந்தொண்டர் தருகிலாப்
பொய்ம்மை யாளரைப் பாடா தேயெந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள்
இம்மை யேதரும் சோறுங் கூறையும்
ஏத்த லாம் இடர் கெடலுமாம்
அம்மை யேசிவ லோகம் ஆள்வதற்
கியாதும் ஐயுற வில்லையே

மிடுக்கி லாதானை வீம னேவிறல்
விசய னேவில்லுக் கிவனென்று
கொடுக்கி லாதானைப் பாரி யேயென்று
கூறி னுங்கொடுப் பார் இலை
பொடிக்கொள் மேனியெம் புண்ணி யன்புக

லூரைப் பாடுமின் புலவீர்காள்
அடுக்கு மேல் அமர் உலகம் ஆள்வதற்
கியாது மையுற வில்லையே

காணி யேற்பெரி துடைய னேகற்று
நல்லனே சுற்றம் நற்கிளை
பேணி யேவிருந் தோம்பு மேயென்று
பேசி னுங்கொடுப் பார் இலை
பூணி பூண்டுழப் புட்சி லம்புந்தண்
புகலூர் பாடுமின் புலவீர்காள்
ஆணி யாய் அமர் உலகம் ஆள்வதற்
கியாது மையுற வில்லையே

நரைகள் போந்துமெய் தளர்ந்து முத்துடல்
நடுங்கி நிற்கும் இக் கிழவனை
வரைகள் போல்திரள் தோளனேயென்று
வாழ்த்தி னுங்கொடுப் பார் இலை
புரைவெள் ளேறுடைப் புண்ணி யன்புக
லூரைப் பாடுமின் புலவீர்காள்
அரைய னாய் அமர் உலக மாள்வதற்
கியாது மையுற வில்லையே

வஞ்ச நெஞ்சனை மாச ழக்கனை
பாவி யைவழக் கில்லியைப்
பஞ்ச துட்டனைச் சாது வேயென்று
பாடி னுங்கொடுப் பார் இலை

பொன்செய் செஞ்சடைப் புண்ணி யன்புக
   லூரைப் பாடுமின் புலவீர்காள்
நெஞ்சில் நோயறுத் துஞ்சு போவதற்
   கியாது மையுற வில்லையே

நலம் இ லாதானை நல்ல னேயென்று
   நரைத்த மாந்தரை இளையனே
குலம் இ லாதானைக் குலவ னேயென்று
   கூறி னுங்கொடுப் பார் இலை
புலமெ லாம்வெறி கமழும் பூம்புக
   லூரைப் பாடுமின் புலவீர்காள்
அலம ராதமர் (1) உலகம் ஆள்வதற்
   கியாது மையுற வில்லையே

நோய னைத்தடந் தோள னேயென்று
   நொய்ய மாந்தரை விழுமிய
தாயன் றோபுல வோர்க்கெ லாமென்று
   சாற் றி னுங்கொடுப் பார் இலை
போயு ழன்றுகண் குழியா தேயெந்தை
   புகலூர் பாடுமின் புலவீர்காள்
ஆயம் இன்றிப்போய் அண்டம் ஆள்வதற்
   கியாது மையுற வில்லையே

எள்வி ழுந்திடம் (2) பார்க்கும் ஆகிலும்
   ஈக்கும் ஈகிலன் ஆகிலும்
வள்ள லேயெங்கள் மைந்த னேயென்று

வாழ்த்தி னுங்கொடுப் பார் இலை
புள்ளெ லாஞ்சென்று சேரும் பூம்புக
லூரைப் பாடுமின் புலவீர்காள்
அள்ளற் (3) பட்டழுந் தாதுபோவதற்
கியாது மையுற வில்லையே

கற் றி லாதானைக் கற்று நல்லனே
காம தேவனை ஒக்குமே
முற் றி லாதானை முற்ற னேயென்று
மொழியி னுங்கொடுப் பார் இலை
பொத்தில் ஆந்தைகள் பாட்ட றாப்புக
லூரைப் பாடுமின் புலவீர்காள்
அத்த னாய் அமர் உலகம் ஆள்வதற்
கியாது மையுற வில்லையே

தைய லாருக்கோர் காமனேயென்றும்
சால நல்வழக் குடையனே (4)
கையு லாவிய வேல னேயென்று
கழறி னுங்கொடுப் பார் இலை
பொய்கை ஆவியின் (5) மேதி பாய்புக
லூரைப் பாடுமின் புலவீர்காள்
ஐய னாய் அமர் (6) உலகம் ஆள்வதற்
கியாது மையுற வில்லையே

செறுவி னிற்செழுங் கமலம் ஓங்குதென்
புகலூர் மேவிய செல்வனை

நறவம் பூம்பொழில் நாவ லூரன்
   வனப்பகை யப்பன் சடையன்றன்
சிறுவன் வன்றொண்டன் ஊரன் பாடிய
   பாடல் பத்திவை வல்லவர்
அறவ னார் அடி சென்று சேர்வதற்
   கியாது மையுற வில்லையே

திருச்சிற்றம்பலம்

(1) அலம் வராதமர்
(2) தடம்
(3) அல்லல்
(4) நலவழ குடையையனே
(5) வாவியின்
(6) ஐயனாரமர்

www.shaivism.org